முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி
அ.வ.எண். 553 /2015

06.07.2022 வா.சா.1 திரு. மைக்கேல்

1, 3, 15 முதல் 20, 22 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:

வழக்கு சொத்தில் காட்டப்பட்டுள்ள சர்வே எண்.108/2 பி10 ஏ பி விஸ்தீரணம் என்றால் 15.60 ஏர் ஆகும். மேற்படி சொத்தின் மேற்கே 1ம் வாதி வீடும், அதற்கு கிழக்கே 6, 13 வாதிகள் வீடும், அதற்கு கிழக்கே எனது வீடும் உள்ளது. 1வது வாதியின் வீட்டின் மேற்கே தென்வடல் முடுக்கு உள்ளது என்றால் சரி தான். தென்வடல் முடுக்கிற்கு அடுத்து மேற்கே 4ம் பிரதிவாதி வீடு உள்ளது. 4ம் பிரதிவாதி வீட்டின் கிழக்கு சுவரில் ஒரு ஜன்னலும், ஒரு பாந்தும் உள்ளது. ஜன்னல் மற்றும் பாந்திற்கு மேலே 1 1/2 அடி அகல சன்சேடு உள்ளது என்றால் சரி தான். அந்த வீட்டின் கிழக்கு சுவரை பராமரிக்க வேண்டும் என்றால் அந்த முடுக்கைத் தவிர வேறு வழி இல்லை என்றால் சரி தான். 4ம் பிரதிவாதியின் வீடும், அவரின் சகோதரர் வீடும் எங்கள் வீடு வருவதற்கு முன்னரே கட்டப்பட்டது என்றால் சரி தான். எங்கள் வீடும், 1வது வாதியின் வீடும் 1985ல் கட்டப்பட்டது என்றால் சரி தான். என்னிடம் காட்டப்படும் புகைப்படங்கள் தான் 4ம் பிரதிவாதி மற்றும் 1ம் வாதியின் வீட்டை காட்டக் கூடியது என்றால் சரி தான். அந்த புகைப்படங்கள் (3 எண்ணம்) மற்றும் சிடி பி.வா.சா.ஆ.1 ஆகும். அதில் முடுக்கு தொடங்குகிறது என்றால் சரி தான். அந்த முடுக்கின் தென்வடலாக அவரது சொத்தின் மேற்கு எல்கையில் 1வது வாதி கல் கால்கள் அமைத்து கம்பி வேலி போட்டுள்ளார் என்றால் சரி தான். அவ்வாறு வேலி போடும் போது சொத்துக்களை அளந்து வேலி போட்டார் என்றால் சரியல்ல. சர்வே எண்.108/4ல் முன்பு கிணறு இருந்தது என்றால் 108/4டில் கிணறு இருந்தது. மேற்சொன்ன முடுக்கு வழியாக 1940 வருட வாக்கில் தென்வடலாக பெரிய வாய்க்கால் சென்றது என்றால் சரி தான். அந்த முடுக்கிற்கு மேல்புறம் 1 முதல் 4 பிரதிவாதிகளின் தாத்தா யாகப்பன் தொழு அமைத்திருந்தார் என்றால் சரி தான்.1932ல் அந்த தொழு அமைக்கப்பட்டது. வா.சா.ஆ.5ல் குறிப்பிட்டுள்ள மரிய மிக்கேல் அம்மாள் எனது பாட்டி. அந்த வா.சா.ஆ.5 ஆவணத்தில் யாகப்பன் தொழுவிற்கும் கிழக்கே எனக் குறிப்பிட்டிருப்பது 1 முதல் 4 பிரதிவாதிகளின் தாத்தா அமைத்த தொழு என்றால் சரி தான்.

வா.சா.ஆ.6 நன்கொடை பத்திரம் எனது தாயார் பெயரில் உள்ளதாகும். அந்தோணி வகையறா வீட்டிற்கும் கிழக்கு என குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த அந்தோணி என்பவர் 1 முதல் 4 பிரதிவாதிகளின் தந்தை ஆவார். முன் பத்திரங்களில் முடுக்கு வா.சா.ஆ.6 ஆவணத்தில் எவ்வாறு அந்தோணி வகையறாவீடு என காட்டப்பட்டுள்ளது என்பது தெரியுமா என்றால் தெரியாது. 1983 கால கட்டத்தில் அந்த முடுக்கு இருந்தது என்றால் சரி தான். எனது தாயாருக்கு ஏற்பட்ட நன்கொடை ஆவணமான வா.சா.ஆ.6 ல் குறிப்பிட்டுள்ள சொத்து விபரம் தவறானது என்றால் சரியல்ல. வழக்கில் காட்டப்பட்டுள்ள மொத்த சொத்தின் விஸ்தீரணம் 45 செண்ட் ஆகும். அந்த சொத்துக்கள் அனைத்தும் வா.சா.ஆ.6 நன்கொடை ஆவணம் அடிப்படையில் எனது தாயாருக்கு பாத்தியப்பட்டது என்பது தான் எங்கள் கட்சி என்றால் சரி தான். வா.சா.ஆ.6 எழுதிக் கொடுத்ததற்கு சொத்து பூர்வீகமாக பாத்தியம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது பற்றி தெரியும். சர்வே எண்.108/2 பி–ல் எனக்கு தெரிய மிக்கேல் அந்தோணியாருக்கு 47 செண்ட் சொந்தம் என்பதற்கு ஆவணம் பார்த்துள்ளேனா என்றால் "அ" பதிவேடு மற்றும் பட்டா பார்த்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.18 ல் பழைய "அ" பதிவேட்டில் மேற்படி சொத்து பீர் முகம்மது பெயரில் உள்ளது. வா.சா.ஆ.19 ல் இசக்கிமுத்து மற்றும் 8 நபர்கள் பெயரில் உள்ளது. அது 1987 ம் ஆண்டு ஆவணமாகும். நான் சொல்லும் அ பதிவேடை வா.சா.ஆ.18 மற்றும் வா.சா.ஆ.19 ஆகும். மிக்கேல் அந்தோணியாருக்கு 47 செண்ட் பூர்வீக பாத்தியம் என நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. எனவே, அந்த சொத்தை நன்கொடை எழுதிக் கொடுத்த எனது தாயாருக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. 1 முதல் 4 பிரதிவாதிகளின் தாய் வழி பாட்டி அன்னம்மாள் என்றால் சரி தான். அவரது கணவர் யாகப்பன் என்றால் சரி தான். அசல் வழக்கு எண்.316/2005 வழக்கை 1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நான் தான் தாக்கல் செய்தேன். அதற்கு முன்பு 1வது வாதி இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.373/2006 தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த வழக்கு முழுமையான விசாரணைக்கு பிறகு 13.06.2007 ல தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரி தான். அந்த வழக்கு முடுக்கைப் பொறுத்து போடப்பட்டது என்றால் சரி தான். அந்த தீர்ப்புக்கு எதிராக மேல்முறையீடு 1 ம் வாதியோ, அவரது வாரிசுகளோ தாக்கல்

செய்யவில்லை என்றால் சரி தான். அந்த வழக்கில் முடுக்கில் 1ம் வாதி அனுபவத்தை இடைஞ்சல் செய்யக் கூடாது என தொடரப்பட்ட வழக்கு என்றால் சரி தான். அ.வ.எண்.316/2005 வழக்கில் 4, 6, 7 பிரதிவாதிகளின் கணவர் மீது தொடரப்பட்டது என்றால் சரி தான். அந்த வழக்கு நிலுவையில் உள்ள போது வழக்குச் சொத்தை சீர்திருத்தம் செய்ய மனு தாக்கல் செய்யப்பட்டு, அது விசாரணைக்கு பின் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரி தான். அதற்கு எதிராக தான் வா.சா.ஆ.2 தாக்கல் செய்யப்பட்டு, புதிய வழக்கு தாக்கல் செய்ய அனுமதி வழங்கப்பட்டு, அந்த சீராய்வு மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரி தான். இந்த பிரதிவாதிகளின் மீது வழக்கு தாக்கல் செய்ய வேண்டிய காரணமே பிராது பத்தி 17 ல் கூறப்பட்டுள்ளவாறு 1 முதல் 5 பிரதிவாதிகள் 2004 ம் வருடத்தில் சுவர் எழுப்பியதால் தான் என்றால் சரி தான். அ.வ.எண்.316/2005 –ல் எங்களுடைய அனுபவத்தை இடைஞ்சல் செய்யக் கூடாது என பரிகாரம் கோரியிருந்தோம் என்றால் சரி தான். அந்த வழக்கில் 1வாதி அமைதியாக அனுபவம் செய்வதை 2005 ம் மாதம் பிப்ரவரி முதல் இடைஞ்சல் செய்ய முற்பட்டதால் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரி தான். வா.சா.ஆ.2ன் படி விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்ய அனுமதி வழங்கி தான் அந்த சீராய்வு முடிக்கப்பட்டது என்றால் சரி தான். ஆனால், இந்த வழக்கில் அந்த இரண்டு பரிகாரங்களைத் தவிர கூடுதல் பரிகாரங்களாக சுவாதீனம், செயல் உறுத்துக் கட்டளை, மத்திய கால வருமானம் ஆகியவை கேட்கப்பட்டுள்ளது என்றால் சரி தான். அ.வ.எண்.316/2006 வழக்கு மூலமும், இந்த வழக்கு மூலமும் வெவ்வேறு என்றால் சரியல்ல. இந்த வழக்கு காலாவதி சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.